*கவனிக்க.- 29.06.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : *தொகுதி* (III) *பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1766 - 2012 ජූලි මස 06 වැනි සිකුරාදා - 2012.07.06

*1766 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 814 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 815 |


**கவனிக்க.-** (i) அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது (திருத்தம்) சட்டமூலம் 2012, யூன் 08 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) ஸ்ரீ குணரதன சர்வதேச மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, யூன் 08 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, யூலை மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, யூன் மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - புத்தளம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2012, ஆவணி மாதம் 06 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2012, ஆனி 14.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| புத்தளம் | புத்தளம் | புத்தளம் நகரப் பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், புத்தளம் |

7-08

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சின் மகளிர் அபிவிருத்தி அலுவலர்களின் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை – 2012

சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சின், மகளிர் அபிவிருத்தி அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையானது 2012, ஒற்றோபர் மாதம் பரீட்சைகள் ஆணையாளரினால் கொழும்பில் நடாத்தப்படும். இந்தப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2012.08.03 ஆந் திகதி ஆகுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. **பரீட்சை ஒழுங்குமுறை**.- இவ்வினைத்திறன்காண் தடைப் பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-

பாட இலக்கம் 1 - நிதிப் பிரமாணம்/ அலுவலக நடைமுறை (நேரம் : 02 மணித்தியாலங்கள்) – 100 புள்ளிகள்

பாட இலக்கம் 2 - ஆண்/ பெண் சமூக அந்தஸ்தும் பெண்கள் உரிமைகளும் (நேரம் : 02 மணித்தியாலங்கள்) – 100 புள்ளிகள்

பாட இலக்கம் 3 - சமூக விஞ்ஞானமும் உளவியல் ஆலோசனையும் (நேரம் : 02 மணித்தியாலங்கள்) – 100 புள்ளிகள்

**குறிப்பு** :

(அ) ஒரு அலுவலர் சகல பாடங்களுக்கும் ஒரே தடவையில் தோற்றுவதற்கு அல்லது தனித்தனியாக வெவ்வேறு தடவைகளில் தோற்றுவதற்கான அனுமதி உண்டு.

(ஆ) சித்தியடைவதற்காக ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 40% புள்ளிகள் அல்லது அதற்குமேல் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(இ) ஒவ்வொரு வினாத்தாளும் கட்டாயம் பதிலளிக்கவேண்டிய வினாக்களைக் கொண்டவையாகும் :

3. **பாடங்கள்** :

3.1 பகுதி A - நிதிப்பிரமாணம்
இலங்கையின் அரசாங்க முகாமைத்துவ ஒழுங்கமைப்பு
நிதிக் கட்டுப்பாடும் வருடாந்த மதிப்பீடும்
(அரசாங்க நிதிப் பிரமாணங்கள் I ஆம் தொகுதியின் X ஆம் அத்தியாயத்தைத் தவிர)

பகுதி B - அலுவலக நடைமுறை
தாபன விதிக்கோவையின் கட்டளைகள்
அலுவலக முகாமைத்துவமானது, தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்களில் உள்ளடங்குகின்றது :
(I, II, IV, V, VII, IX, XII, XV, XXIII, XXVI, XXVII, XXX, XXXI, XXXII, XXXIII)

3.2 ஆண்/பெண் சமூக அந்தஸ்தும் பெண்கள் உரிமைகளும் :
பெண்களுக்கு எதிரான பாகுபாடுகள்
இலங்கை சமூகத்தில் ஆண்/பெண் சமூக அந்தஸ்து
இலங்கை பெண்கள் பிரகடனமும் பெண்களின் உரிமைகளும்

3.3 சமூக விஞ்ஞானமும், உளவியல் ஆலோசனையும் :
கிராமிய சமூக விஞ்ஞானம்
இலங்கையில் நகரமயப்படுத்தல்
கிராம அபிவிருத்தி
உளவியல் ஆலோசனையின் அடிப்படை அம்சங்களும் ஒழுக்கநெறிகளும்
பெண்களும் உளவியல் முறைகேடுகளும்
இலங்கையின் ஆலோசனை அமைப்பும் ஆலோசனை வாய்ப்புகளும்

4. இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான மாதிரி விண்ணப்பப் படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பப்படிவங்களை தயார் செய்துகொள்ள வேண்டும். இந்த விண்ணப்பப்படிவமானது ஏ4 அளவான தாளில் இலக்கம் 1 முதல் 6 வரையும் முதல் பக்கத்திலும் ஏனைய பகுதிகள் இரண்டாம் பக்கத்திலும் உள்ளவாறு தயார் செய்யப்படல் வேண்டும். பரீட்சார்த்திகள் தமது சொந்தக் கையெழுத்தில் இதனை நிரப்ப வேண்டும்.

பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் காணப்பட்ட விண்ணப்பதாரர்களின் பதவி மற்றும் சேவை நிலையும் என்பன பரீட்சை தொடர்பான சகல நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாவதுடன், விண்ணப்பங்களை அனுப்பிய பின்னர் அது தொடர்பில் இடம்பெறுகின்ற மாற்றங்கள் எதுவும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

5. விண்ணப்பப்படிவங்கள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக (பிரதேச செயலகமாயின் பிரதேச செயலாளர் ஊடாக) 2012.08.03 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்குபடுத்தல், வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற மற்றும் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

அரச கரும மொழிக் கொள்கை தொடர்பான நடவடிக்கைக்காக புதிய அலுவலர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை அரச கரும மொழியில் அல்லது தாம் சேவையாற்ற ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள மொழிமூலத்திற்கு அமைவாக தமிழ் மொழியில்/ ஆங்கில மொழியில் தயார்செய்து சமர்ப்பிக்க முடியும்.

6. விண்ணப்பதாரர்களுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பப் பட்டவுடன், அதுபற்றி குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும். இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் குறித்த அனுமதி அட்டைகள் கிடைக்கவில்லையாயின், அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். நீங்கள் வைத்திருக்கும் விண்ணப்பப் படிவத்தினதும் பணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினதும்

உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளையும், பதிவுத் தபாலுக்கான சிட்டையின் பிரதியையும், கொழும்புக்கு வெளியே உள்ள பிரதேசத்தைச் சேர்ந்தவராயின், அனுமதி அட்டையை அனுப்புவதற்கான பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு உங்களின் கோரிக்கைக் கடிதத்தை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்புவது மிகவும் பொருத்தமானது :-

(i) பரீட்சையின் பெயர் :----.
(ii) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :----.
(iii) முழு முகவரி :----.
(iv) விண்ணப்பப்படிவத்தை தபால் செய்த தபால் அலுவலகம், பதிவு இலக்கம் மற்றும் திகதி :----.

7. **ஆளடையாளம்.**- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மண்டப பொறுப்பதிகாரியிடம் தமது ஆளடையாளத்தை உறுதிசெய்தல் வேண்டும். அதற்காக பின்வருவனவற்றில் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரினால் வெளியிடப்பட்டுள்ள செல்லுபடியான தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான வெளிநாட்டு கடவுச்சீட்டு.

மேற்படி ஆவணமொன்றைச் சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரர் ஒருவரின் பரீட்சார்த்தி அந்தஸ்தை இரத்துச்செய்வதற்கு அல்லது ஏற்றுக்கொள்ளாதிருக்கும் அதிகாரம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு உண்டு.

8. **பரீட்சைக் கட்டணம்.**- இந்தப் பரீட்சைக்குத் தோன்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கட்டணங்கள் அறவிடப் படும் :

| பரீட்சைக் கட்டணம் | ரூ. ச. |
|---|---|
| (அ) முதல் தடவைக்கு கட்டணம் அறவிடப்படுவதில்லை | |
| (ஆ) முதல் தடவையின் பின்னர் முழுப் பரீட்சைக்கும் | 400.00 |
| (இ) ஒரு பாடத்திற்கு | 200.00 |

பரீட்சைக் கட்டணமானது, சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சு செயலாளரின் வருமானத் தலைப்பு 120-1-2-0-2401 இற்கு செலவு வைக்கப்படக்கூடியவாறு பிரதேச செயலாளரிடம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் உறுதியாக ஒட்டுதல் வேண்டும். அதன் பிரதியொன்றை வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.

9. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் இந்தப் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக நிர்ணயிக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு பரீட்சை பரீட்சார்த்திகள் உட்படுகின்றனர். மேற்படி சட்டங்கள், விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கும் குறித்த ஆள் உட்படுதல் வேண்டும்.

10. இந்தப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதிபெற்றுள்ள மற்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை வெளியிடப்பட்டுள்ள, தமது திணைக்களம்/அலுவலகத்திலுள்ள அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக திணைக்கள/அலுவலகத் தலைவர்கள் உத்தியோகபூர்வ விடுமுறை வழங்குதல் வேண்டும்.

11. இதில் குறிப்பிடப்படாத யாதாயினுமொரு விடயம் இருப்பின் அது தொடர்பில் சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சுச் செயலாளரின் விருப்பத்திற்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

செயலாளர்,
சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சு.

சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சு,
இல. 175ஏ, நாவலை வீதி,
நுகேகொடை.
2012.06.18.

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சின் மகளிர் அபிவிருத்தி அலுவலர்களுக்கான முதலாவது தகுதிகாண் தடைப் பரீட்சை - 2012**

FIRST EFFICIENCY BAR EXAMINATION - 2012
FOR WOMEN DEVELOPMENT OFFICERS OF MINISTRY OF CHILD DEVELOPMENT AND WOMEN'S AFFAIRS

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)

1. பெயர் :----.

1.1 முதலெழுத்துக்களுடனான பெயர் Mr./Mrs/Miss :----.
(முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)
உதா : SILVA, A.B.

1.2 முதலெழுத்துக்களின் மூலம் குறிப்பிடும் பெயர் :----.
(சிங்களத்தில்/தமிழில்)

1.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. அலுவலக முகவரி :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

2.1 அலுவலக முகவரி :----.
(சிங்களத்தில்/தமிழில்)

2.2 அனுமதி சீட்டு அனுப்பவேண்டிய முகவரி :----.

2.3 தொலைபேசி இலக்கம் :----.

3. பால் :
3.1 பெண்-1, ஆண்-0 [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

3.2 திருமணமானவரா/திருமணமாகாதவரா என்பது-
திருமணமானவர் - 1
திருமணமாகாதவர் - 2 [ ]

3.3 பிறந்த திகதி :-

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.4 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதிக்கு (2012.08.03) வயது :-

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

4. சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சின் மகளிர் அபிவிருத்தி அலுவலர் பதவிக்கு நியமனம் பெற்றுள்ள திகதி (உறுதியாக கடமைகளைப் பொறுப்பேற்ற திகதியைக் குறிப்பிடுக.) : ----.

5. அரச மொழிக் கொள்கையின் குறிக்கோகள் தொடர்பில் முன்னதாகவே இணைந்துள்ளவரா ? அல்லது புதிதாக இணைந்தவரா ? :----.

6. திணைக்களத்தின் பெயர் (பிரதேச செயலகமாயின் அலுவலகத்தின் பெயர்) :----.

7. வர்த்தமானி அறிவித்தலின் 2 ஆம் பந்தியின்கீழ் தோற்றுகின்ற பாடங்களும் பாட இலக்கங்களும் :

| பாடங்கள் | பாட இலக்கம் |
|---|---|
| 1. ...................................... <br> 2. ...................................... <br> 3. ...................................... | ☐☐ <br> ☐☐ <br> ☐☐ |

8. இந்தப் பரீட்சைக்கு முதல் தடவையாகத் தோற்றுகின்றீரா ? :----
.

9. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரம் :----.

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய பிரதேச செயலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்திய திகதி :----.

| பற்றுச்சீட்டை இங்கே உறுதியாக ஒட்டவும். (பிரதியொன்றை வைத்திருக்கவும்.) |
|---|

10. மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சரியானவை என்றும், மேலே குறிப்பிடப்பட்ட மொழிமூலம் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எனக்கு உரிமையுள்ளதென்பதை தெரியப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைகளை நடாத்துவது தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் மேற்கொள்ளப் படுகின்ற தீர்மானங்களுக்கு நான் உட்படுகின்றேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- விண்ணப்பதாரர் தமது திணைக்கள தலைவரின் முன்னிலையில் அல்லது திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு தத்துவமளிக்கப்பட்டுள்ள அலுவலர் ஒருவரின் முன்னிலையில் கையொப்பமிடுதல் வேண்டும்.

**விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்**

எனது அலுவலகத்தின் அலுவலரும், நான் தனிப்பட்ட வகையில் அறிந்தவருமான திருமதி/செல்வி .................................... ............ ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டால் என்பதை இத்தால் உறுதிசெய்கின்றேன்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

**திணைக்கள தலைவரின் சான்றிதழ்**

(i) மேலே தரப்பட்டுள்ள விபரங்களை பரிசீலனை செய்ததாகவும், அவை உண்மையானவை என்றும், உரிய பரீட்சைக் கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளதென்றும், அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும்,

(ii) விண்ணப்பதாரி இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியானவர் என்றும்

சான்றுபடுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ முத்திரையை பதிக்கவும்.)

பதவிப் பெயர் :----.
திகதி :----.

7-79

---

## அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு III இன் அலுவலர்களுக்கான கணனித் திறமையைச் சோதிக்கும் எழுத்துப் பரீட்சையும் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையும் - 2010 (11) (2012)

அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு III இன் அலுவலர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு அமைவான ஒரு வினைத்திறன் காண் தடைப் பரீட்சை மற்றும் கணனித் திறனை அளவிடும் எழுத்துப் பரீட்சை என்பன 2012, ஒற்றோபர் மாதம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. இப்பரீட்சை உரியதாகும் விண்ணப்பதாரர்களைப் பற்றி 2004.12.24 ஆந் திகதிய 1372/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள அரச முகாமை உதவியாளர் சேவைப் பிரமாணத்தின் 5 ஆம் மற்றும் 9 ஆம் பிரிவுகளில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

3. அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு III ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான இப்பரீட்சையானது, கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். உரிய நகரங்களும் நகர இலக்கங்களும் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. விண்ணப்பிக்கும் நகரம் மற்றும் நகரங்கள் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.-

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| மாத்தறை | 04 |
| யாழ்ப்பாணம் | 05 |
| மன்னார் | 06 |
| முல்லைத்தீவு | 07 |
| திருகோணமலை | 08 |
| மட்டக்களப்பு | 09 |
| குருநாகல் | 10 |
| அநுராதபுரம் | 11 |
| பதுளை | 12 |
| இரத்தினபுரி | 13 |
| கிளிநொச்சி | 14 |

மேற்படி ஏதேனும் நிலையங்களுக்காக போதிய அளவு பரீட்சார்த்திகள் இல்லாவிட்டால் அந்நிலையம் இரத்துச் செய்யப்படுமென்பதுடன் அதற்கு அண்மித்துள்ள நிலையத்திற்கு பரீட்சார்த்திகள் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவர்.

4. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் ஒழுங்குகள் விதிகள் என்பனவற்றுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்காக விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் வர்த்தமானப் பத்திரிகையில் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளன. இவ் ஒழுங்குவிதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாவர்.

5. விண்ணப்பம் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமைதல் வேண்டும். பரீட்சார்த்திகள் அம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தமது விண்ணப்பங்களை தயாரித்துக்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக 2012, ஓகத்து 6 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக ''பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை இட்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னனராக கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச் சீட்டு.

மேற்குறிப்பிட்டுள்ள ஓர் ஆவணத்தைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவரின் பரீட்சார்த்தி உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச்செய்யப்படலாம்.

7. **விண்ணப்பப்படிவங்கள்**.- விண்ணப்பப்படிவங்களை "ஏ4" அளவிலான ஒரு தாளில் தயாரித்துக்கொள்ள வேண்டுமென்பதுடன் இலக்கம் 1.0 தொடக்கம் இலக்கம் 5.0 வரையுள்ள பந்திகள் முதலாம் பக்கத்திலும் மிகுதி இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் அமைதல்

வேண்டும். விண்ணப்பத்தைத் தட்டச்சின் மூலம் தயாரித்துக்கொள்ளலாம் எனினும் அதைப் பரீட்சார்த்தி சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் பூர்த்திசெய்ய வேண்டும். விண்ணப்பப்படிவத்தை இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரித்தல் வேண்டுமென்பதுடன ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப்படிவத்தை மட்டும் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை அனுப்புதலாகாது. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத மற்றும் முழுமைபெறாத தகவல்களைக் குறிப்பிட்டுள்ளதான விண்ணப்பப்படிவங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும். பரீட்சைக்கான விண்ணப்பத்தின் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடவும். மேலும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பரீட்சை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளது என்பதில் பரீட்சார்த்தி கவனமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

முதல் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. எனினும் அடுத்த தடவைகளின்போது அலுவலர்கள் ஒரே முறையில் முழுப் பரீட்சைக்குத் தோற்றுவதாயின் பரீட்சைக் கட்டணம் ரூபா 400 உம் ஒரு பாடத்திற்காக மட்டும் தோற்றுவதாயின் பரீட்சைக் கட்டணம் ரூபா 200 ஆகும். இப்பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இல் வரவு வைக்குமாறு தீவிலுள்ள ஏதேனுமொரு மாவட்ட அல்லது பிரதேச செயலகத்திற்கு செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டிவிடவும். மேலும் அதன் புகைப்படப் பிரதியொன்றை தன்வசம் வைத்துக்கொள்வது பிரயோசனப்படலாம். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக்கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

8. விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் நேரசூசி அட்டையின் ஒரு பிரதியுடன் பரீட்சை அனுமதி அட்டையை அனுப்புவார். பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதல் என்பது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதனை ஏற்றுக்கொள்ளுதல் அல்ல என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் அவர்களின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அனுமதி அட்டை இன்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன் அது பற்றி குறிப்பிட்டு பத்திரிகை அறிவிப்பொன்று இலங்கை பரீட்சை திணைக்களத்தால் வெளியிடப்படும். அறிவிப்பு வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிட்டால் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவம் பதிவுசெய்த பற்றுச்சீட்டு, கொழும்பிற்கு வெளியே என்றால் அனுமதி அட்டை அனுப்பி வைப்பதற்கான பெக்ஸ் இலக்கம் குறிப்பிட்ட உங்கள் கோரிக்கை கடிதம் என்பவற்றுடன் இலங்கை பரீட்சை திணைக்களத்திற்கு அறிவித்தல் பயனுள்ளதாகும்.

9. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்கள் கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாண செலவுகள் செலுத்தப்படமாட்டாது.

10. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் இப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் தொடர்புடைய சேவையில் சேர்வதற்காக பரீட்சைக்கு தோற்றிய மொழியிலோ அல்லது அரச கரும மொழியொன்றிலோ அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றலாம். போட்டிப் பரீட்சையின்றி சேவைக்குச் சேர்ந்த அலுவலர்கள் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றில் இப்பரீட்சைக்குத் தோற்றலாம். பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

11. அலுவலர்கள் தாம் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகவும் வேறுபட்ட தடவைகளிலும் தோற்றலாம். எனினும் சித்தி பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்தபட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

12. பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்படுவதுடன் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும்.

13. **பரீட்சைத் திட்டம்**.- பரீட்சார்த்திகள் பின்வரும் பாடங்கள் உள்ளடங்கிய ஓர் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் :-

| பாடம் | பாட இலக்கம் | நேரம் | புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. அலுவலக முறைகள் | 01 | 1 மணித்தியாலம் | 100 |
| 2. கணக்கீட்டு முறைமைகள் | 02 | 1 மணித்தியாலம் | 100 |
| 3. கணனிப் பரீட்சை | 03 | 1 1/2 மணித்தியாலம் | 100 |

13.1 அலுவலக முறைமைகள்.- (பாட இலக்கம் 01).- அரச அலுவலகங்களில் கையாளப்படுகின்ற அலுவலக முறைமைகள் பற்றிய அடிப்படை அறிவும், அவ் அறிவினை செய்முறையாக பயன்படுத்தும் திறனும், கடமையுடன் தொடர்புடைய

ஆவணங்களை நன்கு புரிந்துகொண்டு தெளிவாக சுருங்கிய குறிப்புகளின் மூலம் தமது கருத்துக்களை/ஆய்வுகளை சமர்ப்பிக்கும் ஆற்றலும் விதிக்கப்பட்ட கட்டளையின்கீழ் கடிதமொன்றை வரைவுபடுத்தும் திறனும் சோதிக்கப்படும். இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்திருக்கும்.

பகுதி I – சுருக்க விடைகள் எதிர்பார்க்கப்படும் வினாக்களைக் கொண்டமைந்திருக்கும் வினாத்தாளிலேயே விடை அளித்தல் வேண்டும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். (25 புள்ளிகள்)

பகுதி II – அமைவு முறை கட்டுரைகளிலான வினாத்தாளாகும். நான்கு வினாக்களில் மூன்றுக்கு விடையளித்தல் வேண்டும். (75 புள்ளிகள்)

13.2 கணக்கீட்டு முறைமைகள்.- (பாட இலக்கம் - 02) அரச அலுவலகங்களில் கையாளப்பட்டு வருகின்ற ஆரம்ப கணக்குகள் மற்றும் கணக்கு கட்டுப்பாட்டுப் புத்தகங்களின் செயற்பாடு பற்றிய அறிவையும் புரிந்துணர்வையும் அளவிட இதனால் எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்திருக்கும்.

பகுதி I – சுருக்க விடைகள் எதிர்பார்க்கப்படும் வினாக்களைக் கொண்டமைந்திருக்கும் வினாத்தாளிலேயே விடை அளித்தல் வேண்டும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். (25 புள்ளிகள்)

பகுதி II – அமைவு முறை கட்டுரைகளிலான வினாத்தாளாகும். நான்கு வினாக்களில் மூன்றுக்கு விடையளித்தல் வேண்டும். (75 புள்ளிகள்)

13.3 கணனிப் பரீட்சை.- (பாட இலக்கம் - 03) பரீட்சார்த்தி பின்வரும் ஆற்றல்களைக் கொண்டுள்ளாரா என சோதிப்பது இப்பரீட்சையின் நோக்கமாகும் :-

தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படை எண்ணக்கருக்கள்
"வின்டோஸ்" இயக்க முறைமை
கோப்பு முறை

சொல்முறை வழிப்படுத்தல் - அடிப்படைத் திறமைகள், திரைக்கு பழக்கப்படல், பாடப்பதிப்பு, பாடங்களை நேர்ப்படுத்தல், எழுத்துரு வகையும் பண்புகளும், பந்தி உள்தள்ளல், வரி வெளிகள் மாற்றுதல், தத்தல் அமைப்பு, பாடத்தைக் கண்டுபிடித்தலும் மாற்றிடுதலும், இலக்கணம், தேசோரஸ் நிரல்கள், பக்க அமைவு செயற்பாடுகள்
ஆவணங்களை அச்சிடல், அட்டவணைகள் தயாரித்தல், பாடத்தை வரிசைப்படுத்தல்
கோப்பு முகாமை
அஞ்சல் இணைப்பு
'மக்ரோ' தொழிற்பாடு

விரிதாள் - அடிப்படைத் திறமைகள்
வடிவமைத்தல் (Formatting)
பதிப்பித்தல்
நிரல்களும் வீச்சும், செருகுதல், நீக்குதல்
தகவல்களை வரிசைப்படுத்தல்
வரைபடங்களைப் படைத்தல்
அச்சிடல்
@ பயன்பாடு (@ function)
மக்ரோக்களுடன் பணியாற்றல், கோப்பு முகாமை

தரவுத்தளங்கள் - அறிமுகம், அடிப்படைத் திறமை
தரவுத்தளங்கள் உருவாக்கலும் பிரயோகமும்
படிவங்கள்
இணைப்புப் படிவங்கள், மேல்வரும் படிவங்கள், உரையாடல், தகவல் பெட்டிகள் (popup forms)
வினாக்கள்
வரிசைப்படுத்தல்
அறிக்கைகள்
மக்றோக்களுடன் பணி செய்தல்

| | | |
|---|---|---|
| நிகழ்த்துக்காட்சி/ வரைகலை | - | அடிப்படைத் திறமைகள், பதிப்பித்தல், வடிவமைத்தல்<br>வடிவமைப்பு பிரயோகித்தல், படிவங்களை செருகுதல், ஆயத்தப்படங்களும் வரைபடங்களும்<br>படவில்லை காட்சிகளும் விளைவு அசைவூட்டலும் (master)<br>நிகழ்த்துக் காட்சி கருவிகளைப் பயன்படுத்தல், முதன்மைகளைத் தயாரித்தல், படவில்லைகள் குறிப்புகள் அச்சிடல் |
| இணையம் | - | இணையத்தை அறிமுகப்படுத்தல், உலகளாவிய வலையமைப்பு, எவ்வாறு வழி கண்டறிதல் இணையச் செயல்முறை |
| மின்னஞ்சல் (e-mail) | - | அறிமுகம், அடிப்படைத் திறமைகள், அஞ்சல்களைப் பெறுதல், அனுப்புதல், பதிலளித்தல் |
| | - | இணைப்புகளுடன் செயலாற்றல், புனைப் பெயர்களை உருவாக்கி பயன்படுத்தல், தகவல்களை இயற்றுதல் |

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது :-

பகுதி I – பல்விருப்பு/சுருக்கமான பதில்களை எதிர்பார்க்கும் 40 வினாக்களைக் கொண்டமைந்திருக்கும்.
காலம் : 45 நிமிடங்கள் - (40 புள்ளிகள்)

பகுதி II – பகுதி அமைவு ரீதியிலான 5 வினாக்கள் - காலம் : 45 நிமிடங்கள் - (60 புள்ளிகள்)

**குறிப்பு**.- அரச முகாமை உதவியாளர் சேவைப் பிரமாணத்தின் பந்தி 5:1:2 இன்படி தேசிய பயிலுநர் தொழிநுட்பப் பயிற்சி அதிகாரசபையினால் அளிக்கப்படுகின்ற கணனி நடவடிக்கை உத்தரவுச்சீட்டு அல்லது கணனி நடவடிக்கை உத்தரவுச்சீட்டுக்கு சமமான அல்லது அதைப் பார்க்க உயர்மட்ட தரத்தைக் கொண்டுள்ள மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இதன் I ஆம் அட்டவணையில் காட்டப்படுகின்ற நிறுவனங்களின் மூலம் வழங்கப்பட்ட கணனி சான்றிதழ்களைப் பெற்றுள்ள அலுவலர்கள் இக்கணனி பரீட்சையின் எழுத்துப் பரீட்சையில் இருந்து விலக்களிக்கப்படுவர். மேலும் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையால் அளிக்கப்படும் கணனிப் பிரயோக உதவியாளர் (NVQ மட்டம் 3) சான்றிதழினைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்களும் கணனித் திறன்கள் மீதான எழுத்துமூலப் பரீட்சையில் இருந்து விலக்களிக்கப்படுகின்றனர்.

14. இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

பி. பீ. பீ. எஸ். அபேகுணரத்ன,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2012, யூன் 21.

### அட்டவணை I

**மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்று அங்கீகரிக்கப்படும் நிறுவனங்களினால் வெளியிடப்பட்ட கணனி சான்றிதழ்கள் தொடர்பான அட்டவணை**

| Serial No. | Name of Institute | Address of Institute | Course |
|---|---|---|---|
| 1. | Computer Training Centre | No. 09, Dharmarama Mawatha, Colombo 06 | Computer Application Assistant |
| 2. | Computer Training Centre - NAITA | Negombo Road, Malkaduwawa, Kurunegala | Computer Application Assistant |
| 3. | Computer Training Centre - NAITA | No. 525/2, Maithiripala Senanayaka Mawatha, Rathnanayakepura, Anuradhapura | Computer Application Assistant |
| 4. | Apprenticeship Training Institute | No. 581, Galle Road, Katubedda, Moratuwa | Computer Application Assistant |
| 5. | Computer Training Centre - NAITA | Ratalankawatta, Mapalana, Kamburupitiya | Computer Application Assistant |
| 6. | Sri Saranankara Apprentice Training Centre - NAITA | Udawatta, Baddegama | Computer Application Assistant |
| 7. | Computer Training Centre - NAITA | Mahaweli Economic Agency Building, Embilipitiya | Computer Application Assistant |

| *Serial No.* | *Name of Institute* | *Address of Institute* | *Course* |
|---|---|---|---|
| 8. | Computer Education Centre | Divisional Secretariat Office, Anguruwatha, Madurawela | Computer Application Assistant |
| 9. | Technical College | Werallawatta, Yakkala, Gampaha | Computer Application Assistant |
| 10. | Yovun Nikethanaya | | Computer Application Assistant |
| 11. | Vocational Training Centre | National Youth Services Council, Pallidora Road, Kawdana, Dehiwala | Computer Application Assistant |
| 12. | National Youth Services Council | No. 65, High Level Road, Maharagama | Computer Application Assistant |
| 13. | Don Bosco Vocational Training Centre | Puttalam Road, Nochchiyagama | Computer Application Assistant |
| 14. | Institute of Professional Computer Systems | No. 178A, Colombo Road, Ratnapura | Computer Application Assistant |
| 15. | Technology and Computer Training Institute | No. 15, 1/1, Piyadasa Sirisena Mawatha, Maradana, Colombo 10 | Computer Application Assistant |
| 16. | Cholankanda Youth Training Centre | Udahenthanna, S. P. O. 20506, Via Gampola | Computer Application Assistant |
| 17. | Bishop Leo Technical Institute | USCOD Centre, St. Bedes Home, Badulla | Computer Application Assistant |
| 18. | SOS Children's Village of Sri Lanka | Vocational Training Centre, Maduruketiya, Monaragala | Computer Application Assistant |
| 19. | Beeta Com Multimedia & Computer Studies | No. 20, Danovita Road, Meerigama | Computer Application Assistant |
| 20. | Don Bosco Technical Centre | No. 22, Don Bosco Mawatha, Ettukala, Negombo | Computer Application Assistant |
| 21. | Rathanasela Nenasala Computer Centre | Rathanasela Pirivena, Weegama, Rathmale, Ku/Itanawatta | Computer Application Assistant |
| 22. | Navoda Computer Education Institute | No. 72, Devananda Road, Navinna, Maharagama | Computer Application Assistant |
| 23. | N. K. I. Computer Training Institute | Manahara Building Pituwala Road, Elpitiya | Computer Application Assistant |
| 24. | Lanka Tech Computer | No. 2/52, Horana Road, Piliyandala | Computer Application Assistant |
| 25. | M. D. P. Computer Training Institute | No. 64/A/1, Station Road, Kadana | Computer Application Assistant |
| 26. | Infornet Computer Systems | No. 143/1A, Ananda Senanayaka Complex, Katuwana Road, Homagama | Computer Application Assistant |
| 27. | Informax Computer Technology | No. 52, Matale Road, Galewela | Computer Application Assistant |
| 28. | Advance Training Centre (ATC) | No. 02, Inginiyagala Road, Ampara | Computer Application Assistant |
| 29. | Thondaman Vocational Training Centre | Saumymoorthi Thondaman Memorial Foundation Pool Bank Hatton | Computer Application Assistant |
| 30. | Sri Lanka Nippon Education and Cultural Center | Mahindarama Road, Ethulkotte, Kotte | Computer Application Assistant |
| 31. | Rural Vocational Training Centre | Mudukatuwa, Marawila | Computer Application Assistant |
| 32. | District Vocational Training Centre | Galigamuwa Town, Ballapana, Kegalle | Computer Application Assistant |
| 33. | National Vocational Training Centre | No. 354, Elvitigala Mawatha, Narahenpita, Colombo 05 | Computer Application Assistant |
| 34. | District Vocational Training Centre | Saragama Kurunagala | Computer Application Assistant |
| 35. | National Vocational Training Institute | No. 100, Kandawala Road, Ratmalana | Computer Application Assistant |
| 36. | Rural Vocational Training Centre-Weherahena | Meeta Social Service Foundation, Weherahena, Matara | Computer Application Assistant |
| 37. | District Vocational Training Centre | Wattha, Tissa Road, Wellawaya | Computer Application Assistant |
| 38. | Agonsu Training Center | Saranawattha, Nayamulla, Morawaka | Computer Application Assistant |
| 39. | Special Vocational Training Centre | Higher Computer Training Institute, Fort, Matara | Computer Application Assistant |
| 40. | Kubalgama Sunami Vocational Training Centre | Sri Jinendraramaya, Kubalgama, Weligama | Computer Application Assistant |
| 41. | Lakviru Sevana Rural Vocational Training Centre | No. 48, Bodhirukkarama Mawatha, Wellawatha, Colombo 06 | Computer Application Assistant |
| 42. | National Vocational Training Institute | Niyagama, Thalgaswala | Computer Application Assistant |
| 43. | District Vocational Training Centre | Mirijjawila, Hambanthota | Computer Application Assistant |
| 44. | Rural Vocational Training Centre | Erukkalampiddy, Nagavillu, Palavi | Computer Application Assistant |

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு III இன் அலுவலர்களுக்கான கணனித் ஆற்றலைச் சோதிக்கும் எழுத்துப் பரீட்சையும் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையும்-2010 (II) (2012)**

EFFICIENCY BAR EXAMINATION AND THE WRITTEN TEST ON COMPUTER SKILLS FOR OFFICERS IN CLASS III OF PUBLIC MANAGEMENT ASSISTANTS' SERVICE - 2010 (II) (2012)

| நகரம் | | நகர இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |

(வர்த்தமானி அறிவித்தலின்படி நீங்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரங்களை விருப்பு ஒழுங்கின்படி குறிப்பிடவும்.)
(இதை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

(இது பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

1. 1.1 விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெபிற்றல் எழுத்தில்)
   Mr./Mrs/ Miss :----.
   உதா : Mr. SILVA A. B)
   1.2 முழுப்பெயர் (ஆங்கில கெபிற்றல் எழுத்தில்) :----.
   1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.
   2.1 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (ஆங்கில கெபிற்றல் எழுத்தில்) :----.
   2.2 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (சிங்களத்தில்/தமிழில்) :----.
   2.3 பிரவேச அட்டை அனுப்பப்படவேண்டிய முகவரி (ஆங்கில கெபிற்றல் எழுத்தில்) :----.

3.
   3.1 பால் : ஆண் - 0
   பெண் - 1

   (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

   3.2 பிறந்த திகதி : ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

   3.3 தேசிய அடையாள அட்டையின் இலக்கம் :- ☐☐☐☐☐☐☐☐☐☐

4. நீங்கள் இம்முறை பரீட்சையில் தற்போது தோற்ற உள்ள பாடம்/பாடங்கள் :-
   (வர்த்தமானப் பத்திரிகையின் பந்தி 13.0 ஐப் பார்க்கவும்)

| தொடர் இலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 01<br>02<br>03 | | |

5. தற்போது வகிக்கும் பதவி -
   5.1 பதவி :----.
   5.2 நியமனக் கடிதத்தின் இலக்கம் :----.

6.

6.1 நீங்கள் பரீட்சைக்கு முதன்முதலாக தோற்றுகின்றீர்களா ? :----.

6.2 பரீட்சைக்குத் தோற்றுவது முதற்தடவை அல்லாது இருப்பின் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :----.

6.3 மாவட்ட/பிரதேச செயலகம் :----.

6.4 பற்றுச்சீட்டு இலக்கம் :----.

6.5 திகதி :----.

| |
|---|
| முழுப் பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 400 உம், ஒரு பாடத்திற்காக ரூபா 200 உம் ஆவதுடன் அத்தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இங்கு ஒட்டிவிடவும். பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை தன்வசம் வைத்துக்கொள்வது பிரயோசனப்படலாம். |

மேற்குறிப்பிட்டுள்ள விபரங்கள் சரியானவையென்றும், மேலே காட்டப்பட்டுள்ள மொழிமூலமாக பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் உரித்துடையேன் என்றும், இத்தால் வெளிப்படுத்துகிறேன். இங்கு ஒட்டப்பட்டுள்ள ரூபா ................................ பெறுமதியான பற்றுச்சீட்டு என உறுதிமொழிகின்றேன். இப்பரீட்சை தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு அமைந்தொழுக நான் உடன்படுகிறேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அந்த திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் விண்ணப்பதாரி கையொப்பமிட வேண்டும்.

**கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்**

எனது அலுவலகத்தின் அலுவலரும் தனிப்பட்ட முறையில் எனக்கு தெரிந்தவருமான திரு./திருமதி/செல்வி ...................................... என்பவர் ................ ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளன என்றும் சான்றுப்படுத்துகிறேன்.

----,
சான்றுப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

1. மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டதென்றும் ;
2. இவ் அலுவலர் இப்பரீட்சைக்கு இதற்கு முன் *தோற்றியுள்ளார்/தோற்றவில்லை என்றும் ;
3. அலுவலர் இதற்கு முன்பு பரீட்சைக்கு தோற்றியிருப்பதனால் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு இவ்விண்ணப்பப்படிவத்தில் ஒட்டப்பட்டுள்ளதென்றும் ;
4. அலுவலர் இப்பரீட்சைக்குத் தோற்ற தகுதியுடையவர் என்றும்

இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

*தேவையற்றவைகளைக் கீறிவிடவும்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

7-140

## கல்வி அமைச்சு

### இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடை தாண்டற் பரீட்சை - 2012

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை 2012, ஒற்றோபர் மாதம் கொழும்பில் நடைபெறும். சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலம் பரீட்சை நடைபெறுவதுடன் விண்ணப்பிக்கும் மொழிமூலத்தைப் பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது.

2. இப்பரீட்சைக்கு உரிய பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் 1999, மாச்சு 11 ஆந் திகதிய 1070/13 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. வசதிக்காக அப்பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

உத்தியோகத்தர் ஒருவருக்கு வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்குரிய பாடங்களை ஒரே தடவையில் அல்லது தனித்தனியான சந்தர்ப்பங்களில் தோற்ற முடியும்.

**பாடவிதானம் :**

| விடய இல. | பாடம் | நேரம் | புள்ளி |
|---|---|---|---|
| 01 | **பொது முகாமைத்துவம் மற்றும் தாபனச் செயற்பாடுகள் :** அரச தாபனக்கோவையின் i, ii, iii, iv, v, vii, viii, ix, xii, xiii, xiv, xxiv, xxviii, xxx மற்றும் xxxi ஆகிய வாசகங்களுக்கு விசேட கவனத்துடன் தாபன விதிக்கோவையின் சட்டம் | 1 1/2 மணித்தியாலம் | 100 |
| 02 | **நிதி ஒழுங்குக் கோவை :** அரச நிதி ஒழுங்குக் கோவையின் முதலாவது பிரிவின் i, ii, v, viii, xii மற்றும் xiv வாசகங்களுக்கு விசேட கவனத்துடன் | 1 1/2 மணித்தியாலம் | 100 |
| 03 | **கல்விச் சட்டம் :** பரீட்சார்த்திகளிடம் கீழ்க்குறிப்பிடப்பட்ட கட்டளைச் சட்டம் மற்றும் பாராளுமன்றச் சட்டம் தொடர்பான விளக்கம் எதிர்பார்க்கப்படுகின்றது- | 2 மணித்தியாலம் | 100 |

(i) 1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க கல்விக் கட்டளைச் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட சட்டக் கோவைகள்.

(ii) 1960 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை மற்றும் ஆசிரியர் கல்லூரி (விசேட ஒழுங்கு விதிகள்) சட்டம்.

(iii) 1961 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை மற்றும் ஆசிரியர் கல்லூரி (குறைநிரப்பு ஒழுங்குவிதிகள்) சட்டம்.

(iv) 1976 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பகிரங்கப் பரீட்சை (மறுசீரமைப்பு)ச் சட்டத்தினால் மறுசீரமைக்கப்பட்ட 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பகிரங்க பரீட்சைச் சட்டம்.

(v) 1981 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை (விசேட ஒழுங்குவிதிகள்) சட்டம்.

(vi) 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய கல்வித்தாபனச் சட்டம்.

(vii) 1986 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க கல்விக் கல்லூரிச் சட்டம்.

(viii) 1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கல்வி ஆணைக்குழுச் சபைச் சட்டம்.

(ix) 1997 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க தேசிய ஆசிரிய கல்வி அதிகாரசபைச் சட்டம்.

(x) 13 ஆவது மறுசீரமைப்பு மற்றும் அடிப்படை உரிமை தொடர்பான 3 ஆவது வாசகத்துக்கு விசேட கவனத்துடன் இலங்கை அரசியல் யாப்பு.

(xi) கல்விக்குரியதான மாகாண சபையினால் விதிக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.

**குறிப்பு**.- பரீட்சார்த்திகளினால் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் 40% புள்ளிகளைப் பெறவேண்டும்.

*3. **பரீட்சையின் மொழிமூலம்**.-* (i) *பரீட்சார்த்திகளுக்கு அரச மொழி அல்லது தேசிய மொழி ஆகியவற்றில் ஏதாவதொன்றில் விடையளிக்க முடியும்.*

(ii) *பரீட்சார்த்தி அரச சேவைக்கு இணைந்துகொள்வதற்கு முன்னர் தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழிமூலம் அல்லது போட்டிப் பரீட்சையின்றி அரசசேவைக்கு இணைந்துகொண்டோர் தொடர்பாக*

(iii) *அரச சேவைக்கு இணைந்துகொள்ள தகைமைபெற்ற பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலத்தில் விடையளிக்க முடியும்.*

*4. பரீட்சார்த்தி தமக்கு உரிமையற்ற மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்றுவதாகத் தெரியவருமிடத்து அவர் பரீட்சார்த்தி நிலையிலிருந்து நீக்கப்படுவார்.*

*5. விண்ணப்பப்படிவம் கீழ்க்குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் சகல தலைப்புக்களும் முதலாம் பக்கத்தில் அமையக்கூடியவாறு தயாரிக்கப்பட வேண்டியதுடன் அதற்குரிய தகவல்களை தமது கையெழுத்தினால் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்களும், முழுமையாகப் பூர்த்திசெய்யப்படாத தகவல்களைக் கொண்ட விண்ணப்பப்படிவங்களும் முன்னறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கது என்பதுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி படிவத்திற்கமைவானதா என்பது குறித்து விண்ணப்பதாரியினால் வினவ வேண்டியதுடன் அவ்வாறு இல்லாத பட்சத்தில் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரைச் சிங்கள மொழிமூல விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடவேண்டும்.*

*6. இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துவதற்காக அவரால் விதிக்கப்பட்ட சட்டங்களைப் பின்பற்ற பரீட்சார்த்தி பொறுப்பாக இருக்க வேண்டும்.*

*7. விண்ணப்பப்படிவத்தை 2012.08.03 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். அத்தினத்திற்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2-*II *வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை" எனக் குறிப்பிட்டு அனுப்பவேண்டும்.*

*8. விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரமாகி 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதவர்கள் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தாங்கள் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவம் மற்றும் நிதி செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் உறுதிசெய்யப்பட்ட போட்டோப் பிரதி, பதிவுசெய்த பற்றுச்சீட்டு, கொழும்புக்கு வெளிப் பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு தங்களது கோரிக்கைக் கடிதத்தையும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு வழங்குவது மிகவும் பயன்மிக்கதாக அமையும்.*

*9. மேற்கூறப்பட்ட 8 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்திசெய்யத் தவறும் பரீட்சார்த்திகளினால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.*

*10. விண்ணப்பதாரர் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய விண்ணப்பப்படிவத்தை பரீட்சை தினத்தன்று மண்டபத்தில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்.*

*11. பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக சாட்சிகளை சமர்ப்பிப்பது பரீட்சார்த்தியின் பொறுப்பாக இருப்பதுடன் அதற்காகக் கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும் :-*

(i) *ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை,*

(ii) *செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.*

*12. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குவது பரீட்சைக்குத் தோற்ற சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் என்பதைக் கருத்திற்கொண்டல்ல என்பது குறித்து கவனிக்கவும்.*

*13. இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி கீழ்க்குறிப்பிடப்படும் அடிப்படையில் பரீட்சைக் கட்டணத்தை செலுத்த வேண்டும் :-*

*(அ) முதற் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றுபவர்களிடமிருந்து முழுமையான பரீட்சைக் கட்டணம் அல்லது பகுதிக்காக கட்டணம் அறவிடப்பட மாட்டாது.*

| | | | |
|---|---|---|---|
| | | | *ரூபா* |
| *(ஆ)* | *மொத்தப் பரீட்சைக் கட்டணம்* | - | *450* |
| | *ஒரு பாடத்திற்கு* | - | *150* |

பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-20-13 இல் வைப்பிடக்கூடியவாறு நாட்டின் எந்தவொரு மாவட்ட அல்லது பிரதேச செயலகத்திற்கு செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழராது ஒட்டவும். (மேலும் அதன் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.)

எச். எம். கோட்டாபய ஜயரத்ன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
“இசுருபாய”,
பத்தரமுல்லை,
2012.06.22.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சு**

இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆந் தர வினைத்திறன் தடை தாண்டற் பரீட்சை – 2012
Efficiency Bar Examination in Class 2 Grade II of Sri Lanka Teacher Educators' Service – 2012

(விண்ணப்பப்படிவம் “பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை” என்ற விலாசத்திற்கு நிறுவனத் தலைவரூடாக பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.)
(பரீட்சையின் பெயர் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்.)

உத்தியோகத்தர் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் : சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐
(உரிய குறியீட்டு இலக்கத்தைக் குறிப்பிடவும்)

1. (அ) முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடனான பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :
Mr./Mrs./Miss -----.
உ-ம் : Mr./Mrs./Miss SILVA, A.B.

(ஆ) முதலெழுத்துக்களினால் குறித்துக்காட்டப்படும் பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :-----.

2. பிறந்த திகதி :-

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3. (i) பதவிப் பெயர் :-----.
(ii) சேவையாற்றும் கல்விக் கல்லூரி/ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி/ஆசிரிய மத்திய நிலைய முகவரி :-----.
(அனுமதி அட்டை இம்முகவரிக்கு அனுப்பப்படும்)

4. சொந்த முகவரி (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :-----.

5. அறிவித்தலின் 2 ஆம் வாசகம் (அ) இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாட இலக்கம் மற்றும் பாடத்துடன் எடுக்கும் பாடங்களைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும் :-

| பாட இலக்கம் | பாடத்தின் பெயர் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |

6. இதற்கு முன்னர் இப்பரீட்சைக்கு முழுமையாக அல்லது அதில் ஒரு பகுதிக்குத் தோற்றியுள்ளாரா ? அவ்வாறாயின் பாடம் மற்றும் தோற்றிய ஆண்டு, மொழிமூலத்தைக் குறிப்பிடவும் :-

| பாடங்கள் | ஆண்டு | மொழி மூலம் | பரீட்சை சுட்டெண் |
|---|---|---|---|
| ................................<br>................................ | ................................<br>................................ | ................................<br>................................ | ................................<br>................................ |

7. செலுத்திய பரீட்சைக் கட்டணம் :-

| பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும்.<br>பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கது. |
|---|

8. மேற்கூறப்பட்ட விபரங்கள் சரியானவை என்றும், வர்த்தமானி அறிவித்தலில் 3 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்ட மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற எனக்கு உரிமை உண்டு என்பதை தெரிவிக்கிறேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு கட்டுப்பட இணங்குகிறேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
பரீட்சைத் திணைக்களம்.

(1) இவ்விபரம் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்ற தகுதிபெற்றவர் என்றும் வர்த்தமானி அறிவித்தலின் 3 ஆவது வாசகத்திற்கமைய அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற தகைமை உடையவர் என்றும் சான்றுபடுத்துகிறேன்.

(2) பரீட்சார்த்தி உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியதாகவும் அப்பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளதாகவும் சான்றுபடுத்துகிறேன்.

........................................................
பீடாதிபதி/ஆசிரிய மத்திய நிலையப்
பொறுப்பாளரின் கையொப்பம்,
மற்றும் பதவிப் பெயர்.

திகதி :-----.

7-238

---

## திருத்தம்

### அரச முகாமை உதவியாளர்கள் சேவையில் வகுப்பு III ஐச் சேர்ந்த அலுவலர்களை வகுப்பு II இற்கு தரமுயர்த்தும் பரீட்சை – 2011

2012, மே மாதம் 18 ஆந் திகதிய 1759 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட "அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு III ஐச் சேர்ந்த அலுவலர்களை அச்சேவையின் வகுப்பு II இற்கு தரமுயர்த்தும் பரீட்சை - 2011" அறிவித்தலில் விண்ணப்பம் அனுப்பவேண்டிய இறுதித் திகதி 2012, ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதி என திருத்தப் படுகின்றது.

2. வர்த்தமானப் பத்திரிகையின் 4 ஆம் பந்தியில் தகைமைகள் பூர்த்திசெய்யும் இறுதித் திகதி 2012, ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதி என திருத்தப்படுவதுடன்,

3. மாதிரி விண்ணப்பத்தின் 7.0 (iii) உப பிரிவை பூரணப்படுத்தும் போது விண்ணப்பதாரி திணைக்களத் தலைவரின் உறுதிப்படுத்தலை பூரணப்படுத்தும்போது உரிய திணைக்களத் தலைவர் திருத்தங்களை கவனிக்க வேண்டும்.

4. குறித்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஏற்பாடுகளில் எவ்வித மாற்றமுமில்லை.

பி. பீ. பீ. எஸ். அபேகுணரத்ன,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2012, யூன் 18.

7-189

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

**12. ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2011 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5*** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* ***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.-*** *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்*** *என்பதையும்,* ***அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது*** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

***அட்டவணை - 2012***

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூலை** | .. | வெள்ளி | 06.07.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.06.2012 |
| | | வெள்ளி | 13.07.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.06.2012 |
| | | வெள்ளி | 20.07.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.07.2012 |
| | | வெள்ளி | 27.07.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.07.2012 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 03.08.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.07.2012 |
| | | வெள்ளி | 10.08.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.07.2012 |
| | | வெள்ளி | 17.08.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.08.2012 |
| | | வெள்ளி | 24.08.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.08.2012 |
| | | வியாழன் | 30.08.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.08.2012 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 07.09.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.08.2012 |
| | | வெள்ளி | 14.09.2012 | .. | நண்பகல் 12 | வியாழன் | 30.08.2012 |
| | | வெள்ளி | 21.09.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.09.2012 |
| | | வெள்ளி | 28.09.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.09.2012 |

**பி. கே. எஸ். ரவீந்திர,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*